[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 16

"தமிழ்நாடு சட்டப்பேரவையின் 221(1)-வது விதியின்கீழ் 1974–75-ம் நிதியாண்டிற்கான அவையினர் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கான தேர்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு "ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) 13-உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 22—3—1974-ம் நாள் வெள்ளிக் கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 22—3—1974-ம் நாள், வெள்ளிக் கிழமை, பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 23—3—1974-ம் நாள் சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது 13-க்கும் மேற்படின் 26—3—1974-ம் நாள், செவ்வாய்க்கிழமையன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னாள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(4) அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண். 9/74).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 9/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

அப்படிக் கோருகிற நேரத்தில் இந்த அவைக்கு ஒரு செய்தியை அறிவிக்க விரும்புகிறேன்.